செ.வெ.எண்.85

நாள்.31.10.2017.

திருநெல்வேலி மாநகராட்சி 27வது வார்டு என்.ஜி.ஓ. பி காலனி பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் மொக துப்புரவு பணிகள் மற்றும் டெங்கு கொசு ஒழிப்பு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் இன்று அதிகாலையில் வீடு, வீடாக நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்தார். தூய்மையாக இல்லாத வீடுகளுக்கு அபராதம் விதிக்கவும், விளக்க கடிதம் அனுப்பிடவும் உத்தரவிட்டார்.

-------

திருநெல்வேலி மாநகாரட்சி 27வது வார்டு என்.ஜி.ஓ. பி காலனி பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் மொக துப்புரவு பணிகள் மற்றும் டெங்கு கொசு ஒழிப்பு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் இன்று (31.10.2017) அதிகாலையில் வீடு, வீடாக நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்தார். தூய்மையாக இல்லாத வீடுகளுக்கு அபராதம் விதிக்கவும், விளக்க கடிதம் அனுப்பிடவும் உத்தரவிட்டார்.

என்.ஜி.ஓ. பி காலனி, டிராக்டர் தெரு, விக்டர் தெரு, டிரைவர் காலனி ஆகிய பகுதிகளில் மாநகராட்சி மூலம் நடைபெற்று வரும் மெகா துப்புரவு பணிகள் மற்றும் டெங்கு கொசு ஒழிப்பு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டார். தொடர்ந்து, வீடு, வீடாக சென்று குடிநீர் தொட்டிகள், டிரம்கள் உள்ளிட்டவைகள் சுத்தமாக பராமரிக்கப்பட்டுகிறதா என ஆய்வு செய்தார். மேலும், புதிதாக கட்டப்பட்டு வரும் கட்டடங்களில் கொசு புழு உற்பதியாகிறதா என்பதையும், கொசு ஒழிப்பு புகை மருந்து அடிப்பதையும் ஆய்வு மேற்கொண்டார். கொசு புழு கண்டறியப்பட்ட கூடுதல் கட்டடம் கட்டப்பட்டு வரும் வீட்டிற்கான கட்டடப் பணிகளை நிறுத்தி வைக்குமாறும் உரிமையாளருக்கு அபராதம் விதிக்கவும், குடிநீர் இணைப்பினை துண்டிக்கவும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மாநகராட்சி அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். டெங்கு கொசு ஒழிப்பு மற்றும் விழிப்புணர்வு பணியாளர்களிடம் டெங்கு கொசு புழு ஒழிப்பு பணிகளை மிகுந்த கவனத்துடன் சிறப்பாக பணியாற்ற வேண்டுமெனவும், டெங்கு கொசு ஒழிப்பு புகை மருந்து அனைத்து வீடுகளிலும் அடிக்க வேண்டுமெனவும் உத்தரவிட்டார். மேலும், அப்பகுதி பொதுமக்களிடம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் டெங்கு விழிப்புணர்வு குறித்து எடுத்துரைத்தார்.

ஆய்வின் போது, மாநகராட்சி ஆணையாளர் (பொ) திரு.நாராயணநாயர், மாநகர நகர்நல அலுவலர் மரு.பொற்செல்வன், உதவி ஆணையர் திருமதி.கவிதா, மாநகர உதவி செயற்பொறியாளர் திரு.கருப்பசாமி, நகர ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலர் திருமதி.ராணி குயின், வட்டாட்சியர் திரு.தங்கராஜ், உதவி பொறியாளர் திரு.லெனின் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.